**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

செ.வெ.எண்.*407* நாள்: ***20.08.2026***

**வடகிழக்குப் பருவமழை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை மற்றும் மாதவரம் மண்டலங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தெற்கு வட்டார துணை ஆணையாளர் திருமதி ஸ்வேதா சுமன், இ.ஆ.ப., அவர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

வடகிழக்குப் பருவமழை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள மழைநீர் வடிகால்வாய்கள், வண்டல் வடிகட்டித் தொட்டிகள், ஏரிகள் மற்றும் குளங்களில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, இன்று *(20.08.2026)* வடக்கு வட்டார துணை ஆணையாளர் திருமதி ஸ்வேதா சுமன், இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு-*44*க்குட்பட்ட சுப்பிரமணிய நகர் பிரதான சாலையில் மழைநீர் வடிகால் பணி, நேருஜி *4*வது தெருவில் மழைநீர் வடிகால் பணி, நேருஜி பிரதான சாலையில் உள்ள மழைநீர் வடிகாலில் இருந்து வண்டல்கள் அகற்றும் பணி, வார்டு-*45*க்குட்பட்ட கணேசபுரம் சுரங்கப்பாதைப் பகுதியில் உள்ள மழைநீர் வடிகால் பணி, பெரம்பூர், பிபி சாலையில் உள்ள மழைநீர் வடிகாலில் இருந்து வண்டல்கள் அகற்றும் பணி, வார்டு-*36*க்குட்பட்ட கடும்பாடி அம்மன் கோயில் தெருவில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் பணி, மாதவரம் மண்டலம், வார்டு-*27*க்குட்பட்ட முத்துமாரி தெருவில் உள்ள மழைநீர் வடிகாலில் இருந்து வண்டல்கள் அகற்றும் பணி, வார்டு-*24*க்குட்பட்ட எம்.ஆர்.எச். சாலையில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி, வார்டு-*23*க்குட்பட்ட புழல் பகுதியில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் பணி உள்ளிட்டவற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளையும், மீதமுள்ள மழைநீர் வடிகால்கள் மற்றும் வண்டல் வடிகட்டித் தொட்டிகளிலும் தூர்வாரும் பணிகளை மேற்கொண்டு விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, வடக்கு வட்டார துணை ஆணையாளர் அவர்கள், தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு-*45*க்குட்பட்ட கணேசபுரம் பகுதியில் நடைபெற்று வரும் பாலப் பணிகள் மற்றும் அப்பகுதியில் கட்டப்பட்டு வரும் கட்டடப் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளின்போது, கண்காணிப்புப் பொறியாளர் திரு.ஜி.சொக்கலிங்கம் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**